செய்தி வெளியீடு எண்: 665 நாள்: 15.10.2007

## மூன்றாவது கட்டமாக 30 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம்

### முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளிகள் திறப்பு

**தமிழக அரசின் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் மூன்றாம் கட்டமாக 30 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதற்கான உலகளாவிய ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டது.**

**இதற்கான ஒப்பந்தப் படிவங்களை 110 நிறுவனங்கள் தமிழக அரசிடமிருந்து பெற்றுக் கொண்டன. இவற்றில் மொத்தம் 22 நிறுவனங்கள் நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப் புள்ளிப் படிவங்களை அரசுக்கு அளித்துள்ளன. அந்த விண்ணப்பங்கள் எற்கனவே அறிவித்தபடி இன்று (15.10.2007) மாலை 3.00 மணி வரையில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தில் பெறப்பட்டன. அவ்வாறு பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளி படிவங்கள் அடங்கிய பெட்டி மூடி முத்திரையிடப்பட்டு, மாதிரி தொலைக்காட்சிப் பெட்டிகளுடன் தலைமைச் செயலகத்திற்கு உடனடியாகக் கொண்டு வரப்பட்டன.**

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில், இத்திட்டத்திற்காக உருவாக்கப்பட்டுள்ள சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் குழு உறுப்பினர்களான மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் (தி.மு.க), சட்டமன்றக் கட்சிகளின் தலைவர்கள் திரு டி. சுதர்சனம் (காங்கிரஸ்), திரு கோ.க. மணி (பா.ம.க.), திரு வை. சிவபுண்ணியம் (இந்திய கம்யூனிஸ்ட்), திரு சி. கோவிந்தசாமி (மார்க்ஸிஸ்ட்), திரு கு. செல்வப் பெருந்தகை (விடுதலைச் சிறுத்தைகள்) மற்றும் ஒப்பந்ததாரர்கள்** (Bidders) **முன்னிலையில் 22 ஒப்பந்தப்புள்ளிகளும் இன்று (15.10.2007) மாலை 5.00 மணிக்கு திறந்து ஆய்வு செய்யப்பட்டன. அவை அனைத்தும் விதிகளின்படி சரியாக இருந்ததால் அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளும் அடுத்த கட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.**

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழு மற்றும் ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் 18.10.2007அன்று மாலை 5.00 மணிக்கு விலைப்புள்ளிகள்** (Price Bid) **திறக்கப்படும் எனத் தமிழக அரசு அறிவித்துள்ளது.**

*********

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.